O/C

ஆதிதிராவிடர் நல ஆணையரின் நேர்முக உதவியாளர் அவர்களின் செயல்முறைகள், சென்னை–5
முன்னிலை: திருமதி. ஆர்.ஹேமலதா,M.A.,

ந.க.எண். இ5/4283/2019 நாள்.31.12.2020.

பொருள்: பணியாளர் தொகுதி–தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் 2015–2016 முதல் 2017–2018 ஆம் ஆண்டுக்குரிய இளநிலை உதவியாளர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டது–பணி நியமனம் செய்யப்பட்டது–பணிவரன்முறை செய்து – ஆணையிடல் – தொடர்பாக.

பார்வை:
1. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையக் கடித எண். 1011/PSD-G2/2019. நாள்.15.02.2019.
2. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையர் கடித எண். 1011/PSD-G2/2019. நாள்.30.03.2019.
3. இவ்வலுவலக செயல்முறைகள் ந.க. எண்.இ5/4283/19, நாள். 01.03.2020, 28.05.2019.
4 சம்மந்தப்பட்ட ஆவணங்கள்.

*****

<u>ஆணை:–</u>

பார்வை–1 மற்றும் 2ல் கண்டுள்ள கடிதத்தின்படி தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கீழ்க்காணும் இளநிலை உதவியாளர்களுக்கு பார்வை–3–ல் காணும் செயல்முறைகளில் இத்துறையின் கீழ் பணியிடம் வழங்கி ஆணையிடப்பட்டதை தொடர்ந்து பணியில் சேர்ந்து பணிபுரிந்துவரும் பணியாளர்களுக்கு பார்வை–1 மற்றும் 2ல் கண்டுள்ள கடிதத்தில் பத்தி–5ல் பணிவரன்முறை செய்வது தொடர்பாக பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"The regularization is subject to the outcome of the WP's pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to Combined Civil Services Examination Group-IV 2015-16, 2016-17 and 2017-18 recruitment" என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

தற்பொழுது இணைப்பில் கண்டுள்ள இளநிலை உதவியாளர்களுக்கு அவரவர்களுக்கு எதிரே கலம்–5ல் உள்ள பணியேற்ற நாள் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

மேற்படி பணிவரன்முறை செய்யப்பட்ட இளநிலை உதவியாளர்கள் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகால தொடர் பணியில் இரண்டு ஆண்டு காலம் தகுதிகாண்பருவத்தை திருப்திகரமாக முடித்திட வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறார்கள்.

தகுதிகாண்பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அலுவலக நடைமுறைநூல் தேர்வில் (DOM Test) தேர்ச்சி பெறுதல் மற்றும் பவானிசாகர் பயிற்சியில் தேர்ச்சி பெற்றிருத்தல் அவசியமாகிறது. இவர்களுக்கு தகுதிகாண்பருவம் முடித்த பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் பெற்று வழங்கப்பட வேண்டும்.

இச்செயல்முறையினையும் சம்மந்தப்பட்டவரின் பணிப்பதிவேட்டினையும் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலையும் உடன் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும்படி சம்மந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் / பள்ளித் தலைமையாசிரியர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு.
தொடர்புடையவரின் பணிப்பதிவேடு.

ஆதிதிராவிடர் நல ஆணையரின்
நேர்முக உதவியாளர்

பெறுநர்.
சம்மந்தப்பட்ட இளநிலை உதவியாளர்கள் (உரிய வழியாக).

நகல்.
1. சம்மந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்.
2. சம்மந்தப்பட்ட தலைமையாசிரியர்கள்
3. முக்கிய ஆணைத் தொகுப்பு.